# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்


எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 029/மா/2017

ஆணை எண். 107/2017

நாள் : 10/05/2017

**திரு எஸ். தங்கவேலு,**
**திருச்சிராப்பள்ளி – 02.** – முறையீட்டு மனுதாரர்

**உதவி ஆணையர்,**
**ஸ்ரீரங்கம் கோட்டம்,**
**திருச்சிராப்பள்ளி – 620 006.** – எதிர் மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, சின்னக்கடை தெரு(கிழக்கு), எண்.6/6 முகவரியில் வசிக்கும் திரு S.தங்கவேலு அவர்களின் 16.01.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 19.01.2017 அன்று பெறப்பட்டு 29/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக ஸ்ரீரங்கம் கோட்டம் உதவி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## <u>ஆணை</u>

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, சின்னக்கடை தெரு(கிழக்கு), எண்.6/6 முகவரியில் வசிக்கும் திரு S.தங்கவேலு என்பவர், பாகப்பிரிவினை மூலம் பெறப்பட்ட தனது வீட்டிற்கு விதிக்கப்பட்ட சொத்துவரி தனது தாயார் திருமதி T.P.S. ரெங்கம்மாள் பெயரில் உள்ளது என்றும், சொத்துவரி பெயர் மாற்றம் தனது பெயரில் வழங்கக்கோரி ஸ்ரீரங்கம் கோட்டம் உதவி ஆணையர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கும் மனுச் செய்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்றும், மாநகராட்சிக்கு வரவேண்டிய வரியை வசூலிக்காமல் சாக்குபோக்கு சொல்லி பல ஆண்டுகளாக அலைக்கழித்து வருகின்றனர் என்றும் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். மேலும், மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் தன்னிடம் பிரதிபலன் எதிர்பார்க்கின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டம் உதவி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. ஸ்ரீரங்கம் கோட்ட உதவி ஆணையர் 20.03.2017 நாளிட்ட கடிதத்தில் விரிவான அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். மனுதாரர், சொத்துவரி பெயர் மாற்றம் செய்துதரக் கோரியுள்ள வீட்டிற்கு சொத்துவரி விதிப்பு எண்.11001507–ல் திருமதி ரெங்கம்மாள் பெயரில் உள்ளது என்றும், அவரது இறப்பிற்குப் பின் பாகப்பிரிவினை பத்திரம் மற்றும் இறப்பு, வாரிசு சான்றுகளை சமர்ப்பித்து தனது பெயரில் சொத்துவரி மாற்றம் செய்து தரக்கோரி முறையீட்டு மனுதாரர் மனு செய்துள்ளதாகவும் உதவி ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், மேற்படி வீட்டிற்கான சொத்துவரி முறையீட்டு மனுதாரர் பெயரில் மாற்றம் செய்வதற்கு, முறையீட்டு மனுதாரரின் சகோதரரின் மனைவி திருமதி தெய்வம்மாள் திருச்சி மாவட்ட கூடுதல் III-வது நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளதாகவும், 468/2013 எண்ணிட்ட மேற்குறிப்பிட்ட வழக்கில் வழங்கப்படும் தீர்ப்புரையின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் ஸ்ரீரங்கம் கோட்ட உதவி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரர் திரு S. தங்கவேல் அவர்களிடம் 08.05.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. தங்களது சகோதரர்களுக்குள் ஏற்பட்ட வாய்வழி பாகப்பிரிவினை ஒப்பந்தப்படி தனது பாக சொத்துக்களுக்கு முழு உரிமை உள்ளதென திருச்சி நீதிமன்றத்தில் தீர்ப்பாகியுள்ளது என்றும் இருப்பினும் தனது சகோதரரின் துணைவியார் திருமதி எல். தெய்வம்மாள் அவர்கள் மாநகராட்சி அதிகாரிகளின் அறிவுரையின்படி சொத்து வரிகள் பெயர்மாற்றம் குறித்து வழக்கு தொடுத்துள்ளதாகவும், அவ்வழக்கு மீதான விசாரணை மேற்கொள்ளப்படாமல் நிலுவையில் உள்ளதாகவும், திருமதி எல். தெய்வம்மாள் சட்டவிரோதமாக குடிநீர் இணைப்பு பெற்றுள்ளதுடன் ஐம்பது ஆண்டு காலமாக தண்ணீர் வரியும் செலுத்தவில்லை என்றும் விசாரணையின்போது தெரிவித்தார். திருச்சி லோக் அதாலத்தில் தாக்கல் செய்த வழக்கு மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட எண்.669/2016, மற்றுமொரு அசல் வழக்கு எண்.246/2016 நிலுவையில் உள்ளன எனவும் தெரிவித்தார்.

4. முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள வீட்டிற்கான சொத்துவரியை, மனுதாரரின் பெயரில் மாற்றம் செய்வதற்கு அவரது சகோதரரின் துணைவியார் வழக்கு தொடுத்துள்ளார். வழக்கும் நிலுவையில் உள்ளது. வழக்கிற்குட்பட்ட சொத்திற்கு, சொத்துவரி பெயர்மாற்றம் செய்வது முறையாகாது. மேலும், 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப்பிரிவு 10(3) (b) ன் கீழ் நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனிலும் இம்முறைமன்ற நடுவம் விசாரணை மேற்கொண்டு எந்தவொரு ஆணையும் பிறப்பிக்க இயலாது. இந்நேர்வில் மாநகராட்சி அலுவலர்களும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இந்நிலையில் தன்னிடம் பிரதிபலன் எதிர்பார்த்து மாநகராட்சி அலுவலர்கள் தன்னைஅலைக்கழிக்கின்றனர் என்ற மனுதாரரின் கூற்று ஏற்புடையதல்ல. முறையீட்டு மனுதாரர் 85 அகவை கடந்த மூத்த குடிமகனும் ஒய்வு பெற்ற அரசு அதிகாரியும் ஆவார், எனவே, சொத்து மீதான உரிமை குறித்து நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியவுடன், தீர்ப்பின் அடிப்படையில் சொத்துவரி மாற்றம் செய்வதற்கான நடவடிக்கையை ஸ்ரீரங்கம் கோட்டம் உதவி ஆணையர் மேற்கொள்ளவும் மேலும், முறையீட்டு மனுதாரரது சகோதரரின் துணைவியார் திருமதி எல். தெய்வம்மாள் மாநகராட்சி சட்டவிதிமுறைகளுக்கு மாறாக குடிநீர் இணைப்பினைப் பெற்று பயன்படுத்தி வருவாரேயானால், சட்டவிதிகளுக்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளவும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, மே திங்கள், 10–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 12/5/17

12.5.17
12/5/17

பெறுநர்

எஸ். தங்கவேலு,
எண்.6/6, சின்னக்கடை வீதி (கிழக்கு),
திருச்சிராப்பள்ளி – 02.

உதவி ஆணையர்,
ஸ்ரீரங்கம் கோட்டம்,
திருச்சிராப்பள்ளி – 620 006..

மாநகராட்சி ஆணையாளர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி.

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்